08.04.2026.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.182/2018

**பி. வா.சா.1**

| **பெயர்** | சுப்பிரமணியன் | | |
|---|---|---|---|
| **த/பெ** | கோவர்தன் | **மதம்** | |
| **கிராமம்** | விழுப்புரம் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 60/ 2026 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 08.04.2026. |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் முதல் பிரதிவாதி. நான் இலட்சுமணசாமி தரப்பினரை பேரனாவேன். எனது பெரியப்பாவினுடைய மனைவி 4- ம் பிரதிவாதி. எங்கள் தரப்பில் நாங்களும், வாதிகளும் பிரதிவாதிகள் 2, 6, 7, 8 மற்றும் 11 ஆகியோர்களுக்கிடையே பஞ்சாயத்தார் தலையீட்டின் படி சமரசமாகி நாங்கள் ஒரு சமரச மனுவினை தாக்கல் செய்துள்ளோம். அந்த சமரச மனுவில் கூறப்பட்டுள்ளவாறு B அட்டவனை சொத்து எங்களுக்கும், வாதிகள் ஒரு தரப்பினராகவும், 9, 10, 11 பிரதிவாதிகள் 3- ம் தரப்பினராகவும், ஒவ்வொரு தரப்பினருக்கும் தலா 1/ 3 பங்கு முதல்நிலை தீர்ப்பாணை வழங்க பிரார்த்திக்கிறோம். அதுபோல ஏ அட்டவணை சொத்துளை 2, 8 - பிரதிவாதிகளுக்கு ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை வழங்க எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. புல எண். 160/2 25 சென்ட் நிலம் பொறுத்து வழக்கினை தள்ளுபடி செய்ய ஆட்சேபணை கிடையாது.